செ.வெ.எண். 189 நாள் - 14.04.2025

## பத்திரிக்கைச் செய்தி

நீலகிரி மாவட்டத்தில் பள்ளிகளில் செயல்படும் சத்துணவு மையங்களில் காலியாக உள்ள 119 சமையல் உதவியாளர் பணியிடங்கள் நேரடியாக நியமனம் செய்யப்பட உள்ளன. வட்டாரம் வாரியாக நேர நியமனம் செய்யப்பட உள்ள சமையல் உதவியாளர் பணியிடங்களின் எண்ணிக்கை அந்தந்த வட்டார அலுவலகங்களில் இனச்சுழற்சி வாரியாக தகவல் பலகையில் ஒட்டப்படும். மாதிரி விண்ணப்ப படிவங்கள் நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம். அனைத்து வட்டாரங்கள் மற்றும் நகராட்சி அலுவலகங்களில் தகவல் பலகையில் ஒட்டப்படும். சத்துணவ மையங்களில் காலியாக உள்ள சமையல் உதவியாளர் பணியிடம் தொகுப்பூதிய அடிப்படையில் பணி நியமனம் செய்யப்படும். அவ்வாறு பணிநியமனம் செய்யப்படும் பணியாளர்களுக்கு ஓராண்டு கால பணிக்கு பின்பு சிறப்பு கால முறை ஊதியத்தில் (ஊதிய நிலை 1 (Level of Pay Rs.3000-9000) ஊதியம் வழங்கப்படும். இப்பணிக்கு 21 வயது முதல் 40 வயதுடைய பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம்.

பொது பிரிவினர் மற்றும் தாழ்த்தப்பட்டோர் 21 முதல் 40 வயது வரை. பழங்குடியினர் 18 முதல் 40 வயது வரை. விதவை. கணவரால் கைவிடப்பட்டவர் 20 முதல் 40 வரை. குறைந்தபட்ச கல்வித் தகுதி (10 ம் வகுப்பு தேர்ச்சி அல்லது தோல்வி பெற்றிருக்க வேண்டும். நியமனம் கோரும் மையத்திற்கும் விண்ணப்பதாரரின் குடியிருப்பிற்கும் இடைப்பட்ட தூரம் 3 கி.மீ க்குள் இருக்க வேண்டும் (ஊராட்சி – குக்கிராமம் - வருவாய் கிராமம் கணக்கில் எடுத்துக்கொள்ள தேவையில்லை). மாற்றுத் திறனாளிகள் ஒதுக்கீட்டில் 4 சதவீதம் இட ஒதுக்கீடு குறைவான பார்வைத் திறன் (மூக்கு கண்ணாடி முலம் சரி செய்யப்பட்டது). காது கேளாதோர் (கருவி பொருத்தப்பட்டவர்) குள்ளத்தன்மை கொண்டவர் உடல் இயக்க குறைபாடு (ஒரு கால்) குணப்படுத்தப்பட்ட தொழு நோய் (40 சதவீதம் கைகளின் முழு செயல்பாட்டு திறன் உணர்திறன் மற்றும் செயல்திறன் உள்ளடக்கியது) திரவ வீச்சினால் பாதிக்கப்பட்டவர் குறிப்பிட்ட கற்றல் திறன் குறைபாடு (மிதமான) விதவைகள், கணவரால் கைவிடப்பட்டோர் மற்றும் ஆதரவற்ற பெண்களுக்கு 25 சதவீதம் இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. காலிபணியிடங்களுக்கு விண்ணப்பிக்கும் போது உரிய விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து தொடர்புடைய ஊராட்சி ஒன்றியம் மற்றும் நகராட்சி அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் **26.04.2025** மாலை 5.45 மணிக்குள் மட்டுமே அதற்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

விண்ணபத்துடன் இணைக்க வேண்டிய நகல்கள் பள்ளிச் சான்றிதழ், மதிப்பெண் சான்றிதழ், குடும்ப அட்டை, இருப்பிட சான்று, ஆதார் அட்டை, சாதிச் சான்று, விதவை, கணவரால் கைவிடப்பட்டோர் மற்றும் ஆதரவற்ற பெண்கள் சான்றிதழ், மாற்றுத் திறனாளிகள் என்பதற்காக சான்றிதழ் ஆகியவை.

இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நீலகிரி மாவட்டம்.**

NilgirisPRO ProNilgiris NilgirisPRO